# நியூசிலாந்து பயணியர் வருகை அட்டை

OCT 2018

இந்தப் படிவத்திலும் வருகைச் செயல்முறையின்போதும் சேகரிக்கப்படும் தகவல்கள் சுங்கம், குடிவரவு, உயிர்ப் பாதுகாப்பு, எல்லைப் பாதுகாப்பு, சுகாதாரம், இயற்கை வளம், காவல்துறை, அபராத அமலாக்கம், நீதித்துறை, ஆதாயங்கள், சமூகச் சேவை, தேர்தல் துறை, உள்நாட்டு வருவாய் மற்றும் நாணயச் சட்டங்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்கு முற்படுகின்றன. இத்தகவல்கள் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுகின்றன, மேலும் அவை நியூசிலாந்து சட்டத்தின்கீழ் அவற்றை நிர்வகிக்கின்ற மற்றும் பெறுவதற்குரிய உரிமையுள்ள முகைமைகளுக்குத் தெரிவிக்கப்படும். இது அந்த முகைமைகளுக்கு இடையிலான தரவுகளைப் பொருத்திப் பார்க்கும் நோக்கங்களையும் உள்ளடக்குகின்றது. தகவல்கள் சேகரிக்கப்பட்ட பின்னர், அவை புள்ளியியல் நோக்கங்களுக்காக நியூசிலாந்து புள்ளியியல் துறையால் பயன்படுத்தப்படலாம்.

- **இந்த வருகை அட்டையானது ஒரு சட்டரீதியான ஆவணம் ஆகும் – தவறான அறிவிப்புகள் சரக்குகளின் பறிமுதல், அபராதங்கள், வழக்குத் தொடர்வு, சிறைத் தண்டனை மற்றும் நியூசிலாந்திலிருந்து வெளியேற்றப்படுதல் போன்றவை உள்ளிட்ட தண்டனைகளுக்கு இட்டுச் செல்லக்கூடும்.**
- குழந்தைகள் உள்ளிட்ட ஒவ்வொரு பயணியருக்கும் ஒரு தனிப்பட்ட வருகை அட்டை கண்டிப்பாக நிரப்பப்பட வேண்டும்.
- தயவுசெய்து ஆங்கிலத்தில் பதிலளிக்கவும், மேலும் இரு பக்கங்களிலும் நிரப்பவும்.
- இதேபோன்று பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுக்கொள்ளவும்: NEW ZEALAND அல்லது விடைகளைப் பின்வருமாறு குறியிடவும்: ✓

## 1

விமான எண்/கப்பலின் பெயர்

விமான இருக்கை எண்

நீங்கள் **இந்த** விமானத்தில்/கப்பலில் ஏறிய வெளிநாட்டு விமான நிலையம்/துறைமுகம்

கடவுச்சீட்டு எண்

கடவுச்சீட்டில் காண்பிக்கப்பட்டபடி தேசிய இனம்

குடும்பப் பெயர்

வழங்கப்பட்டுள்ள அல்லது இறுதிப் பெயர்கள்

பிறந்த தேதி நாள் மாதம் ஆண்டு

பிறந்த நாடு

தொழில் அல்லது வேலை

நியூசிலாந்தில் உங்களின் முழுமையான தொடர்பு அல்லது வீட்டு முகவரி

மின்னஞ்சல்

கைபேசி/தொலைபேசி எண்

## 2a நீங்கள் நியூசிலாந்தில் வசித்தால், இந்தப் பிரிவுக்கு பதிலளிக்கவும். இல்லையெனில் 2bக்குச் செல்லவும்.

எவ்வளவு காலம் நீங்கள் நியூசிலாந்திற்கு வெளியில் இருந்துள்ளீர்கள்? ஆண்டுகள் மாதங்கள் நாட்கள்

வெளிநாடுகளில் இருக்கும்போது எந்த நாட்டில் நீங்கள் அதிக காலம் செலவிட்டீர்கள்?

உங்கள் பயணத்தின் முக்கியக் காரணம் என்னவாக இருந்தது? ○ தொழில் ○ கல்வி ○ மற்றவை

அடுத்த 12 மாதங்களில் நீங்கள் எந்த நாட்டில் நீங்கள் அதிகம் வசிப்பீர்கள்? ○ நியூசிலாந்து ○ மற்றவை

## 2b நீங்கள் நியூசிலாந்தில் வசித்திராவிட்டால் இந்தப் பிரிவுக்கு விடையளிக்கவும்.

நீங்கள் எவ்வளவு காலம் நியூசிலாந்தில் தங்கியிருக்க எண்ணம் கொண்டுள்ளீர்கள்? ○ நிரந்தரமாக **அல்லது** ஆண்டுகள் மாதங்கள் நாட்கள்

நீங்கள் நிரந்தரமாகத் தங்காவிட்டால், நீங்கள் நியூசிலாந்திற்கு வருகைபுரிவதற்கான முக்கியக் காரணம் என்ன?

○ நண்பர்கள்/உறவினர்களைக் காண ண ○ தொழில் ○ ஓய்வுநாட்கள்/விடுமுறைக் காலம்

○ மாநாடு/கூட்டம் ○ கல்வி ○ மற்றவை

நீங்கள் கடைசியாக எந்த நாட்டில் 12 மாதங்கள் அல்லது கூடுதல் காலம் வசித்தீர்கள்?

மாநிலம், மாகாணம் அல்லது ஆட்சி எல்லை

தபால் இலக்கம் அல்லது அஞ்சல் குறியீடு

**கூடுதல் கேள்விகளுக்காகவும் கையொப்பமிடுவதற்கும் தயவுசெய்து பக்கத்தைத் திருப்பவும்**

**3** கடந்த 30 நாட்களின்போது நீங்கள் இருந்து வந்த நாடுகளைப் பட்டியல் இடவும்:

**4** உங்கள் பயண மூட்டைகளில் என்னென்லாம் உள்ளடங்கியுள்ளன என்று — ஆம் / இல்லை

**5** **எச்சரிக்கை**: தவறான அறிவிப்பானது, **$400 உடனடி அபராதத்திற்கு** வழிவகுக்கலாம்.
**நீங்கள் பின்வருவனவற்றை நியூசிலாந்திற்குக் கொண்டு வருகின்றீர்களா:**

- **ஏதேனும் உணவுகள்:** சமைக்கப்பட்டவை, சமைக்கப்படாதவை, புத்தம் புதியவை, பதப்படுத்தப்பட்டவை, பொதியில் அடைக்கப்பட்டவை அல்லது உலர்த்தப்பட்டவை? — ஆம் / இல்லை
- **விலங்குகள் அல்லது விலங்குத் தயாரிப்புப் பொருட்கள்**: இறைச்சி, பால் தயாரிப்புகள், மீன், தேன், தேனீ தயாரிப்புகள், முட்டைகள், இறகுகள், சிப்பிகள், கம்பளி, தோல்கள், எலும்புகள் அல்லது பூச்சிகள் போன்றவை உள்ளிட்டவை? — ஆம் / இல்லை
- **தாவரங்கள் அல்லது தாவரத் தயாரிப்புப் பொருட்கள்:** சமயரீதியான வழிபாடுகள் அல்லது மருத்துவப் பயன்பாட்டிற்கான பொருட்கள் உள்பட, பழங்கள், பூக்கள், விதைகள், பூண்டுகள் மரம், மரப்பட்டைகள், இலைகள், கொட்டைகள், காய்கறிகள், தாவரங்களின் பாகங்கள், பூஞ்சை, பிரம்பு, மூங்கில் அல்லது வைக்கோல் போன்ற பொருட்கள்? — ஆம் / இல்லை

**பின்வருவன உள்ளிட்ட உயிர்ப் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கும் பிற பொருட்கள்:**

- விலங்கு மருந்துகள், உயிரியல் நுண்ணுயிர் வளர்ப்புகள், உயிரினங்கள், மண்அல்லது நீர்? — ஆம் / இல்லை
- தோட்டக்கலை, தேனீ வளர்ப்பு, மீன் பிடித்தல், நீர் விளையாட்டு அல்லது முக்குளித்தல் நடவடிக்கைகளுக்கான பொருட்கள் உள்பட, விலங்குகள், தாவரங்கள் அல்லது நீர் போன்றவற்றுடன் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்? — ஆம் / இல்லை
- ஏதேனும் காலணிகள், கூடாரங்கள், முகாமிடல், வேட்டையாடல், மலையேறுதல், கோல்ஃப் அல்லது விளையாட்டு உபகரணங்கள் உள்பட, வெளிப்புற நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள்? — ஆம் / இல்லை

கடந்த 30 நாட்களில் (நியூசிலாந்திற்கு வெளியே இருந்த சமயத்தில்) நீங்கள் ஏதேனும் வனப் பகுதிகளைப் பார்வையிட்டுள்ளீர்களா, விலங்குகளைத் (வீட்டு வளர்ப்பு பூனைகள் மற்றும் நாய்கள் தவிர) தொட்டுள்ளீர்களா அல்லது விலங்குகள் அல்லது தாவரங்களை வளர்க்கும் அல்லது செயல்முறைப்படுத்தும் இடங்களைப் பார்வையிட்டுள்ளீர்களா? — ஆம் / இல்லை

**6** **நீங்கள் பின்வருவனவற்றை நியூசிலாந்திற்குக் கொண்டு வருகின்றீர்களா:**

- மருந்து: 3 மாதங்களுக்கு மேலாக வழங்கப்பட்ட மருந்து அல்லது உங்களுக்கு பரிந்துரைக்கப்படாத மருந்தா? — ஆம் / இல்லை
- **கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட பொருட்கள்:** உதாரணமாக, ஆயுதங்கள், இழிவான பிரசுரங்கள், அருகிவரும் தாவரங்கள் அல்லது வன விலங்குகள், சட்டவிரோத அல்லது கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகள்? — ஆம் / இல்லை
- **மது**: 3 பாட்டில் மது வகைகள் (ஒவ்வொன்றும் 1.125 லிட்டர்களுக்கு மிகாமல்) மற்றும் 4.5 லிட்டர் ஒயின் அல்லது பீர் ஆகியவற்றிற்கும் கூடுதலாக? — ஆம் / இல்லை
- **புகையிலை**: 50 சிகரெட்டுகள் அல்லது 50 கிராம் புகையிலைத் தயாரிப்புகள் (சிகரெட்டுகள் அல்லது பிற புகையிலைத் தயாரிப்புகளின் ஒரு கலவை உள்ளிட்டவை) ஆகியவற்றிற்கும் கூடுதலாக? — ஆம் / இல்லை
- **வெளிநாடுகளில் பெறப்பட்ட மற்றும்/அல்லது நியூசிலாந்தில் சுங்கவரி இல்லாமல் வாங்கப்பட்ட சரக்குகள்:** மொத்த மதிப்பு NZ$700க்குக் கூடுதலாக (அன்பளிப்புகள் உட்பட)? — ஆம் / இல்லை
- **தொழில் அல்லது வணிகப் பயன்பாட்டிற்காகக் கொண்டுசெல்லப்படும் சரக்குகள்?** — ஆம் / இல்லை
- **மற்றொரு நபரின் சார்பாகக் கொண்டுசெல்லப்படும் சரக்குகள்?** — ஆம் / இல்லை
- **ரொக்கம்**: பயனர் காசோலை, வங்கி வரைவோலை, மணியார்டர், பண அஞ்சல் போன்றவை உள்பட NZ$10,000 அல்லது அதற்கும் மேல் (அல்லது அதற்கு சமமான வெளிநாட்டு பணம்)? — ஆம் / இல்லை

**7** நீங்கள் ஒரு தற்போதைய நியூசிலாந்து கடவுச்சீட்டு, ஒரு குடியிருப்பு வகுப்பு விசா அல்லது ஒரு திரும்பிவரும் குடியிருப்பாளருக்கான விசா போன்றவற்றை வைத்துள்ளீர்களா?
– ஆம் எனில் **10** க்குச் செல்லவும் — ஆம் / இல்லை

நீங்கள் ஒரு வெளிநாட்டுக் கடவுச்சீட்டைப் பயன்படுத்துகின்ற ஒரு நியூசிலாந்து குடிமகனா?
– ஆம் எனில் **10** க்குச் செல்லவும் — ஆம் / இல்லை

நீங்கள் ஒரு ஆஸ்திரேலியக் கடவுச்சீட்டு, ஆஸ்திரேலிய நிரந்தரக் குடியிருப்பு விசா அல்லது ஆஸ்திரேலியக் குடியிருப்பாளருக்கான திரும்பிவரும் விசா போன்றவற்றை வைத்துள்ளீர்களா? – ஆம் எனில் **9** க்குச் செல்லவும். — ஆம் / இல்லை

**8** **மற்றவை அனைத்தும்.**
**உங்கள் விசாவின் காலாவதி தேதிக்கு முன்னர் நீங்கள் கண்டிப்பாக நியூசிலாந்திலிருந்து வெளியேறிவிட வேண்டும் அல்லது நீங்கள் வெளியேற்றப்படுவதை எதிர்கொள்வீர்கள்**
நீங்கள் நியூசிலாந்திற்கு மருத்துவ சிகிச்சைக்காக அல்லது கலந்தாலோசனைக்காக அல்லது குழந்தை பெற்றெடுப்பதற்காக வருகின்றீர்களா? — ஆம் / இல்லை

**ஒன்றைத் தேர்வுசெய்யவும்**

நான் ஒரு தற்காலிக நுழைவு விசாவை வைத்துள்ளேன் (நீங்கள் தற்போது ஒரு விசாவை வைத்திருந்து, அது உங்கள் கடவுச்சீட்டில் ஒரு ஒட்டுவில்லையாகஇணைக்கப்படாவிட்டாலும்கூட, ஆம் என்பதை டிக் செய்யவும்). — ஆம்

**அல்லது** என்னிடத்து ஒரு விசா இல்லை, மேலும் நான் வருகையின்போது ஒரு பார்வையாளர் விசாவிற்காக விண்ணப்பிக்கின்றேன். — ஆம்

**9** நீங்கள் எப்போதாவது 12 மாதங்கள் அல்லது அதிக காலம் சிறையில் இருக்கும்படியான தண்டனைக்குள்ளாகியுள்ளீர்களா அல்லது, ஏதேனும் ஒரு சமயத்தில் ஏதேனும் ஒரு நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளீர்களா, அகற்றப்பட்டுள்ளீர்களா அல்லது விலக்கி வைக்கப்பட்டுள்ளீர்களா? — ஆம் / இல்லை

**10** **நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவை, சரியானவை மற்றும் முழுமையானவை என்று நான் உறுதியளிக்கின்றேன்.**

கையொப்பம் ________ தேதி ___ / ___ / ___

(18 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்காக பெற்றோர் அல்லது காப்பாளர் கண்டிப்பாகக் கையொப்பமிட வேண்டும்)

தனியுரிமைச் சட்டம்1993 ஆனது, தனிப்பட்ட தகவல்களை அணுகுவதற்கான மற்றும் திருத்துவதற்கான உரிமைகளை வழங்குகின்றது. நீங்கள் இந்த உரிமைகளைக் கைக்கொள்ள விரும்பினால், தயவுசெய்து நியூசிலாந்து சுங்கச் சேவைகளை 0800 428 786 என்ற எண்ணில் அல்லது feedback@customs.govt.nz என்னும் மின்னஞ்சல் முகவரியில் மற்றும்/அல்லது நியூசிலாந்து குடிவரவுத் துறையை PO Box 1473, Wellington என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.